# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 | தொலைபேசி: 23411 | நிறுவியது 1947

வள்ளுவர் ஆண்டு 2008 | ஐ. அவ். 3 — வைகாசி 9 (22-5-77) ஞாயிறு | புத்தகம்30 | இதழ் 111


## செல்வா அஸ்தி அடக்கம்

21-5-77 காலை 7-30 மணிக்கு தென் இந்திய திருச்சபை சேமக் காலையில் தந்தை செல்வாவின் அஸ்தி கிறிஸ்தவ சடங்குகளுடன் நல் அடக்கம் செய்யப்படும்.

22-5-77 மாலை 5-00 மணிக்கு தெல்லிப்பழை தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் தோத்திர ஆராதனை நடைபெறும். இதில் தென் இந்திய திருச்சபை அத்தியட்சர் அருட்திரு குலேந்திரன் வண. ஜெயசிங்கம் ஆகியோர் விசேட உரை நிகழ்த்தவுள்ளனர்.

# தமிழர் விடுதலைக் கூட்டணி
## அரசியற் கட்சியாக பதிவு!
## தேர்தல் சின்னம் உதயசூரியன்! 26 இடங்களில் போட்டி!

தேசிய அரசுப்பேரவை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தன்னை ஒரு அரசியற் கட்சியாக பதிவுசெய்து கொள்ளவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை கூட்டணியின் இரு செயலதிபர்களும் இப்போது சுறுசுறுப்புடன் கவனித்து வருகின்றனர். கூட்டணியின் தேர்தல் சின்னமாக உதயசூரியன் சின்னமே இருக்கும்.

இம்மாதம் 18ம் திகதி தேசிய அரசுப்பேரவை கலைக்கப்பட்டிருக்கிறது. ஜூன் 6ம் திகதி திங்கட்கிழமை வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் இறுதி நாளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுத்தேர்தல் ஜூலை 21ம் திகதி வியாழக்கிழமை

—4-ம் பக்கம் பார்க்க

### நினைவாலய நிலத்தில் செல்வாவின் அஸ்தி!

யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் பூதவுடல் எரியூட்டப்பட்ட இடத்தில் 21-5-77 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அமரரின் சமயாசாரப்படி நல் அடக்கம் செய்யப்படும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த இடத்திலேயே மூதறிஞருக்கு நினைவாலயமும் அமைக்கப்படவிருக்கிறது. நினைவாலயம் அமையும் இடத்தைச் சுற்றி மதில் கட்டப்பட்டுள்ளது. அஸ்தி அடக்கம் செய்யும் நிகழ்ச்சியில் கூட்டணி தலைவர்களும் பொதுமக்களும் கலந்துகொள்ளுகின்றனர்.

### பொலீசார் தடுத்தனர்



மலையகத்தில் குடியிருக்க நிலம் கோரிய தமிழ் இளைஞன் இலட்சுமணன் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்து மட்டக்களப்பில் கவிஞர் காசிஆனந்தன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றபோது பொலிசார் அதைத் தடுக்கவே, தடுத்த இடத்திலேயே அமர்ந்து ஊர்வலத்தினர் சத்தியாக்கிரகம் நடத்தினர். படத்தில் கவிஞர் காசிஆனந்தன், கூட்டணிப் பிரமுகர்கள் இரா. அம்பலவாணர், வ. பாலசிங்கம், ஆகியோரையும், பொலிசார் வழிமறித்து நிற்பதையும் காணலாம்.

## தமிழ் தொழிலாளர்கள் லயன்களுக்கு தீவைப்பு!

மலையகத்தில் தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களுக்கு எதிரான சிங்கள இனவெறி விசுவரூபமெடுத்து வருகிறது. பத்தனை டெவன் தோட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலட்சுமணன் என்ற தமிழ் இளைஞர் பலியாகியதையடுத்து மலையகமெங்கும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

புசல்லாவையில் டெல்டா தோட்டத்தின் ஒரு பிரிவிலிருந்த 14 லயன்களில்(தொழிலாளர் குடியிருப்புக்கள்) 13லயன்கள் அண்மையில் வெளியினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சுமார் 1500 தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் வீடுவாசல்களையும் தமது உடைமைகளையும் இழந்து அநாதைகளாகவும் அகதிகளாகவும் நிற்கின்றனர்.


தீ வைப்பு காரணமாக காயமுற்ற தமிழ்தொழிலாளர்களில் 5பேர் புசல்லாவை வைத்திய சாலையிலும், 2பேர் கம்பளை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

தமிழ்த்தோட்டத் தொழிலாளர்கள் மீது அடுத்தடுத்து நடத்தப்பட்டுவரும் தாக்குதல் மீது பொலிசார் தொடர்ந்தும் அசிரத்தை காட்டுவார்களானால் இத்தொழி

—8-ம் பக்கம் பார்க்க

# காசி ஆனந்தனின் ஊர்வலத்தை பொலீசார் தடுத்தனர்
## இளைஞர்கள் கைது! மட்டுநகரில் பரபரப்பு!

மலையகத்தில் — பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர்நீத்த சிவனு இலட்சுமணனுக்கு அனுதாபம் தெரிவிக்கவும் பொலிஸ் அட்டூழியத்துக்கு கண்டனம் தெரிவிக்கவும் மட்டக்களப்பில் கவிஞர் காசிஆனந்தனின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை தமிழ் மகளிர் பேரவை ஆகிய அமைப்புக்கள் ஒழுங்கு செய்திருந்த மாபெரும் கண்டன ஊர்வலத்துக்கு பொலிசார் தடை விதித்தனர். இத்தடை உத்தரவை பொலிஸ் உதவி மாஅதிபர் விதித்ததாக மட்டக்களப்பு பொலிஸ் உயர் அதிகாரிகள் கூறினார்கள்.



மலையகத் தமிழ் இளைஞன் இலட்சுமணன் சுடப்பட்டதை ஆட்சேபித்து மட்டுநகர் தமிழ் இளைஞர்கள் கண்டன ஊர்வலம் நடத்த ஏற்பாடுசெய்ததையடுத்து கைதுசெய்யப்பட்ட த. இ. பேரவை இளைஞர்களான மோகனச் சந்திரன், சகாயம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

15-5-77 அன்று காலை மட்டக்களப்பு நகர் எங்கும் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது. ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு எதிரான சுலோகங்கள் நகரின் சுவர்கள் வீதிகள் எங்கணும் காட்சி தந்தன. அதிகாலையிலேயே ஊர்வலத்தைப் பற்றிய பேச்சே எங்கும் அடிப்பட்டது. தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களான மோகனச்சந்திரன், சகாயம் ஆகிய இரு இளைஞர்கள் காலை ஒன்பது மணி அளவில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விட்டார்கள். இதைத் தொடர்ந்து நிலைமை மேலும் விறுவிறுப்படைந்தது.

பொலிசாரின் தடையை மீறி எப்படியும் ஊர்

—5-ம் பக்கம் பார்க்க

## செல்வகுமார் விடுதலை!

யாழ் முன்னாள் மேயர் அல்பிறட் துரையப்பா கொலை வழக்கில் ஏழாவது சந்தேக நபராக குற்றம் சாட்டுப் பட்டிருந்த இளைஞர் செ. செல்வக்குமார் கொழும்பு பிரதம நீதவான் ஆர். பி. ரணராஜாவினால் விடுதலை செய்யப்பட்டார். திரு. செல்வக்குமார் மீது எதுவித குற்றச்சாட்டும் இல்லாததினால் நீதவான் அவரை விடுதலை செய்தார்.

விடுதலையாகி வெளியே வந்த செல்வக்குமார், கண்ணீர்மல்க, "என் நண்பர்களான ஏனைய ஆறுபேரும் இதுபோல விடுதலையாகி வெளியே வரும் நாளே என் உண்மையான விடுதலை நாள்" என்று உணர்ச்சியுடன் தெரிவித்தார். அத்துடன் தமக்காக வாதாடிய சட்டத்தரணிகள் அனைவருக்கும் தமது இதயம் கலந்த நன்றியை அவர் தெரிவித்துக்கொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளையினர் 18-5-77ல் கொழும்பில் நடத்திய கருத்தரங்கிலும் செல்வக்குமார் முதன் முதலாகக்கலந்துகொண்டு உரையாற்றினார்.

தமிழ் ஈழத்தேசி[illegible]ன் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ கம்யூனிஸ்டுகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியும்

தமிழ் தேசிய இனத்தின் விடுதலை உணர்வையும், தன்னைத்தானே ஆளவேண்டுமென்ற அதன் சுதந்திர வேட்கையையும் மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக்கிளை இப்போது புரிந்துகொண்டு இருக்கிறது.

தமிழினத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் கிளை அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் இப்போது ஏற்றுக்கொண்டு இருக்கிறார்.

இந்த சிந்தனை மாற்றத்தின் விளைவாக தமிழ் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து தமிழ் இனத்தின் சுதந்திரத்துக்காக தோளோடு தோள் நின்று போராடப் போவதாக மேடைகளில் பகிரங்கமாக முழங்கி வருகிறார்.

தமிழினம் ஒரு தனித் தேசிய இனம்; அதற்கு தேசிய சுயநிர்ணய உரிமையும் இறைமையும் உண்டு. அந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர, இறைமையுள்ள மதசார்பற்ற சோசலிச தமிழ் ஈழ அரசு (Free Sovereign Secular Socialist State of Tamil Eelam) ஒன்றை உருவாக்கவேண்டும் என்பதே கூட்டணியின் முற்று முடிவான இலட்சியம்; இதுவே வட்டுக்கோட்டைப் பிரகடனமுமாகும்.

ஆனால்; யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலமும், கூட்டணியின் மேற்கண்ட தனிநாடு லட்சியத்தை இன்னும் வந்தடையவில்லை; அந்த இலட்சியத்தை நோக்கி மெல்ல மெல்ல வந்துகொண்டிருக்கிறார்கள் என்று வேண்டுமானால் கூறலாம்!

யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சிக்கிளையின் இன்றைய கண்ணோட்டத்தில், தமிழ் இனம் ஒரு தனித் தேசிய இனம்; அதற்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்; அந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் பிரதேசங்களில் பிரதேச சுயாட்சியை நிறுவி அதற்கு "தமிழ் ஈழம்" என்று பெயர் வைக்கவேண்டும் என்ற அந்த அளவிலேயே தமிழ் கம்யூனிஸ்ட் தோழர்கள் நிற்கிறார்கள்!

அதாவது—ஒரே இலங்கை, ஐக்கிய இலங்கை — என்ற மாயையிலிருந்து இன்னும் அவர்கள் முற்றாக விடுபடவில்லை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை—கோரிக்கை — தமிழ் ஈழத்துக்கு பூரண சுதந்திரம்!

தமிழ் கம்யூனிஸ்ட்டுகளின் இன்றைய நிலை—தமிழ் ஈழத்துக்கு பிரதேச சுயாட்சி!

தமிழ் பிரதேசங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்று அழைக்காமல் 'தமிழ் ஈழம்' என்று தனி நாட்டின் பெயர் சூட்டி இப்போது அழைக்கத் தொடங்கியிருக்கிறார்கள் தமிழ் கம்யூனிஸ்ட்கள்—இது வரவேற்கத் தக்க ஒரு மாற்றம் தான்

தமிழர்விடுதலைக்கூட்டணியின் 'தனிநாடு' கொள்கையை தமிழ் ஈழ கம்யூனிஸ்டுகள் இன்னும் ஏற்றுக்கொள்ளாவிடினும் அந்த இலக்கை நோக்கி அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற அளவில் அவர்களை வரவேற்கிறோம்!

கூட்டணியின் இயக்கங்களுக்கும், இலட்சியங்களுக்கும் அவர்கள் மனமுவந்து தருகின்ற ஆதரவை — தமிழின ஒற்றுமையை மேலும் பலப்படுத்துகின்ற உறவை — நாம் விரும்பி வரவேற்கிறோம்!

ஒற்றுமை பெரியதுதான்; அதைக்கட்டிக்காப்பதும் வளர்ப்பதும் நமது கடமைதான்; அதே சமயம் ஒற்றுமைக்காக இலட்சியம் பின்னுக்குத் தள்ளப்படுவதையும் நாம் ஏற்க முடியாது; காலப்போக்கில் தமிழ் கம்யூனிஸ்டுகளும் 'சுதந்திர, இறைமையுள்ள மதசார்பற்ற சோசலிச தமிழ் ஈழம்'' என்ற நிலையை ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயல்படுவதன்மூலம், கூட்டணியை பலவீனப்படுத்துவதோ, திசைதிருப்புவதோ தமது நோக்கம் அல்ல— என்று திரு. வி. பொன்னம்பலம் கருகம்பானையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியிருக்கிறார். (ஆதாரம் —வீரகேசரி 17-5-77)

அவரது வார்த்தையை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம்; அவரது அந்தரங்க சுத்தியை நாம் சந்தேகப்படவில்லை!

ஆனால், தந்தை செல்வாவின் அணிக்கு அவர் புதியவர் என்பதாலோ, அல்லது கூட்டணியின் கொள்கையில் அவர் போதிய அளவு இன்னும் ஊறுததாலோ— தந்தை செல்வாவின் இலட்சியம் என்ன — அவர் கண்ட கனவு என்ன என்பதையெல்லாம் இன்னும் தெளிவாக புரிந்து கொள்ளாததனாலோ —அக்கூட்டத்தில் அவர் தவறான ஒரு கருத்தை கூறியிருக்கிறார்.

'தமிழ் மக்கள் வாழும், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அவர்கள் தம்மைத் தாமே ஆளும் பிரதேச சுயாட்சி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட தந்தை செல்வாவின் கனவான தமிழ்ஈழக் கனவை நனவாக்குவதே எமது நோக்கமாகும்' (வீரகேசரி 17-5-77)

மேற்கண்டவாறு திரு. வி. பொன்னம்பலம் பேசியிருக்கிறார். தந்தை செல்வா கண்ட கனவு தமிழ் ஈழத்துக்கு பிரதேச சுயாட்சியல்ல—தமிழ்ஈழம் சுதந்திரத் தனிநாடாக வேண்டும் என்பதே தந்தை செல்வா கண்ட கனவாகும்!

1957ம் ஆண்டு காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா, தமிழரசுக்கட்சியின் ஆகஸ்ட் போராட்டத்தை கைவிடச் செய்யும் நோக்குடன், பிரதேசசுயாட்சியை வழங்க அவராகவே முன்வந்து செல்வாவுடன் ஒப்பந்தம் எழுதிய நேரத்திலும் கூட, அந்த ஒப்பந்தத்தை தந்தை செல்வா அவர்கள் ஓர் இடைக்கால ஒப்பந்தமாகவே ஏற்றுக்கொண்டார்.

அன்றைய அவரது ஒரே இலட்சியம், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பூரண சுயாட்சியும்—அதே சமயம மத்தியில் சமஷ்டி அமைப்பும்தான்!

ஆனால், இறுதிக் காலத்தில் அவர் சமஷ்டிக்கொள்கையை தமிழரசுக்கட்சி கைவிட்டு விட்டதாகவும் தனிநாடு அமைக்கப்போராடுவதே தமிழினம் சுதந்திரமாக வாழ ஒரே வழியென்றும் தேசிய அரசுப்பேரவையில் 19-11-76ல் நிகழ்த்திய தமது இறுதிப்பேச்சின் போது திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அறைகூவல் விடுத்திருந்தார்.

இதுவே அவர் தமிழ் சமுதாயத்துக்கு எழுதி வைத்து விட்டுச்சென்ற உயிலாகும்.

ஆம் — 1976மே 14ல் வட்டுக்கோட்டையில் பிரகடனப்படுத்தப்பட்ட சுதந்திர, இறைமையுள்ள மதசார்பற்ற சோசலிச தமிழ் ஈழமே கூட்டணியின் ஒரே இலட்சியம்!

அந்த இலட்சியமே தந்தை கண்ட கனவு — அதுவே தமிழ் சமுதாயத்தின் தாரக மந்திரம்!

ஆகவே வி. பொன்னம்பலத்தை கேட்டுக்கொள்ளுகிறோம் — இலட்சிய ஒருமைப்பாடு காண இன்னும் கொஞ்சம் மேலே படியேறி வாருங்கள்! எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்!

தந்தை செல்வா அவர்கள் கண்ட கனவு பிரதேச சுயாட்சி என்று இனிமேல் மறந்தும் வாய் தடுமாறிக் கூட கூறிவிடாதீர்கள்! அது அந்தப்பெரியவருக்கு களங்கம் ஏற்படுத்துவது போன்றதாகும்!

செல்வா கண்ட சுதந்திரத் தமிழீழம் என்ற கனவை நிறைவேற்ற எம்மோடு இணையுங்கள்!

—கோவை மகேசன்

---

## ● தமிழ் ஈழ விடுதலைப் போரில்

# தமிழ் - சிங்கள மார்க்சிஸ்டுகளின் பங்கு!

**தமிழ்ஈழ சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் மார்க்சிஸ்டுகளின் பங்கு என்ன? என்பதனை மார்க்சிச - லெனினிசக் கொள்கை விளக்கத்துடனும், உலகெங்கிலும் மார்க்சிஸ்டுகள் நடைமுறையில் செயலாற்றும் ஆதாரங்களுடனும் விளக்கியிருந்தேன். இதன் அடிப்படையில் தமிழ்ஈழ சுதந்திரத்துக்காகப் போராடவேண்டியது ஒவ்வொரு தமிழ் மார்க்சிஸ்டினதும் கடமையாகும். தமிழ் ஈழம் சுதந்திர பெறவேண்டியதன் அவசியத்தை சிங்கள மக்களிடையே பிரசாரம் செய்வது சிங்கள மார்க்சிஸ்டுகளின் கடமையாகும்.**

குவிபெக்கிலும், கனடாவிலும் உள்ள மார்க்சிஸ்டுகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் எமது கருத்திற்கு மேலும் வலுவூட்டுகின்றன. இன்று குவிபெக்கில் நடந்துவரும் சுதந்திரப் போராட்டம் "பார்ட்ஸி குவிபெக்குவா" என்னும் பூர்சுவா இயக்கத்தின் தலைமையிலேயே நடைபெறுகிறது. எனினும் குவிபெக்கில் உள்ள மார்க்சிச இயக்கங்கள் யாவும் இச்சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்து தீவிர பங்கு எடுத்து வருகின்றன. இவர்களுடைய கருத்துப்படி குவிபெக் தேசத்தை கனடா சுரண்டுகிறது. ஆகவே குவிபெக் மக்கள் நடத்தும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டியது தமது கடமையாகும் எனக் கருதுகின்றனர். குவிபெக் மக்களின் சுயநிர்ணய உரிமையை உபயோகித்து "சுதந்திரம்" பெறும் போராட்டத்தில் இம்மார்க்சிஸ்டுகள் முக்கிய பங்கெடுத்து வருகின்றனர்.

ஜீன்—போல் பெலடயர், கேபொட் ஆகிய குவிபெக் மார்க்சிஸ்டுகள் அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில் "பூர்சுவா இயக்கமான பார்ட்ஸி குவிபெக்குவா குவிபெக் மக்களின் சுதந்திர தாகத்தைப் பிரதிபலிக்கிறது. இவ்வியக்கத்தின் தலைமையை நாம் என்றும் ஏற்றுக்கொள்ளாவிட்டால் கூட, குவிபெக்கின்விடுதலைப் போரை நாம் தீவிரமாக ஆதரிக்கிறோம். சுதந்திர குவிபெக் என்பதே நம்முடைய முக்கியமானதும் முதலாவதமான கோஷம். குவிபெக் சுதந்திரம் பெற்றதும் அங்கு பூர்சுவா — முதலாளிக் கும்பலைத் தூக்கியெறிந்து "மக்கள் சனநாயகப் புரட்சி"யை நடத்தி "தொழிலாளர் குடியரசை" நிறுவுவோம்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

உண்மையான மார்க்சிச-லெனினிசக் கொள்கையைப் புரிந்துகொண்ட தமிழ் மார்க்சிஸ்டுகள் ஈழத்திலும் வெளிநாடுகளிலும், எமது கொள்கையான "சுதந்திர தமிழ் ஈழத்தை" ஆதரிக்க முன்வருவது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. புரிந்து கொள்ளாதவர்களுக்கு குவிபெக் மார்க்சிஸ்டுகளின் முன் மாதிரி ஒரு படிப்பினையாகட்டும்.

எமது அயல்நாடான 'சிறீ லங்கா'வின் மார்க்சிஸ்டுகள் கனடாவில் உள்ள ஆங்கில மார்க்சிஸ்டுகளின் முன்மாதிரியைப் பார்த்தாவது எமது விடுதலைப்போரின் நியாயத்தை சிங்கள மக்கட்கு விளக்க முன்வரவேண்டும், இளைஞர் சோசலிஸ்ட் இயக்கம் புரட்சிவாத மார்க்சிஸ்ட் முன்னணி சோசலிஸ்ட் நடவடிக்கை இயக்கம், பீகிங் ஆதரவான கனடா கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்) ஆகிய கனடிய ஆங்கில இயக்கங்களும் குவிபெக்கின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்து ஆங்கிலமக்களிடையே பிரசாரம் செய்துவருகின்றனர்.

"குவிபெக்கும் கனடாவும் மணம் முடித்த தம்பதிகள் போன்றவர்கள்" எனப் பிரசாரம் செய்துவரும் கனடியப் பிரதமர் பியரே எலியட் ட்ரூடோவைக் கண்டிக்கும் இவ் ஆங்கிலேய மார்க்சிஸ்டுகள் 'கணவன் மனைவியை ஏமாற்றிக்கொண்டு அவளை எந்நேரமும் அடித்துத் துன்புறுத்திக்கொண்டிருந்தால் அக்கணவனின் கொடுமையிலிருந்து விடுபட விவாகரத்துச்செய்ய வேண்டியது மனைவியின் கடமை' எனக் கூறி 'கனடா என்னும் கொடுமைபடுத்தும் கணவனிடமிருந்து குவிபெக் என்னும் மனைவி பிரிவதில் என்ன 'தவறு?' எனப் பதிலளித்துள்ளனர். வெறும் பேச்சளவில் மாத்திரம் நிறுத்திக்கொள்ளாது கனடாவெங்கும் குவிபெக் சுதந்திரப் போராட்டத்திற்காதரவாகப் பிரச்சாரம் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளையும் செய்து வருகின்றனர்.

சிங்கள மார்க்சிஸ்டுகள் மார்க்சிச-லெனினிசக்கொள்கையைச் சரிவர உணர்ந்துகொண்டு, குவிபெக், பாஸ்க் போன்ற போன்ற போராட்டங்களில் கனடிய, ஸ்பானிய மார்க்சிஸ்டுகள் காட்டும் உதாரணத்தைப் பின்பற்றி ஈழவிடுதலைப்போராட்டத்துக்காதரவாகசிங்களமக்களிடையே பிரசாரம்செய்ய வேண்டும். அன்றேல் மார்க்சிசக் கொள்கைக்கு அழியாக் களங்கம் ஏற்படுத்திய குற்றத்திற்குள்ளாவார்கள். இவர்களுடைய தவறுகளை எதிர்காலச் சரித்திரம் நிச்சயம் குறித்துக்கொள்ளும்.

**கலாநிதி இராஜ. இராஜேந்திரன்**
(நியூயார்க் —அமெரிக்கா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன்னும் 20 ஆண்டுகளுக்கு செல்வாவின் பணி

# ஈழத் தமிழர்களுக்கு தேவைப்பட்டது!

**ஈழத் தமிழர்தந்தை செல்வா அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் சென்னை மண்ணடியில் 3-5-77 அன்று நடை பெற்றது. கூட்டத்திற்கு முன்னுள் இதிமுக தலைவர் திரு. ஏ. எஸ்' மணவைத்தம்பி தலைமை தாங்கினர்.**

**மறைந்த செல்வா அவர்களுக்கு இரங்கல் தெரிவித்து முன்னுள் மேயர் சா. கணேசன், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த செல்வேந்திரன், தமிழ்நாடு முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த அப்துல்காதர், கி. வள்ளுவன், யூசுப், கழகத் தலைமை நிலையச் செயலாளர் வீராசாமி, முன்னுள் அமைச்சர் பா. உ. சண்முகம், பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் பேசினர். இறுதியில் தி. மு. கழகத் தலைவர் கலைஞர் கருணநிதி உரை நிகழ்த்தினர்.**

களாக ஆகிவிடக்கூடாது, பிறமொழி ஆதிக்கத்தால் தமிழ்ச் சமுதாயத்தின் மானம்—மரபு மங்கிவிடக் கூடாது. தமிழ்மொழி பட்டுப்போய் விடக்கூடாது. நமக்கும் இந்தியாவில் மற்ற மொழிக்காரர்களுக்கு இருக்கிற உரிமைகளெல்லாம் இருந்தாகவேண்டும் என்ற அந்த உணர்வோடு — அவரவர் மொழி பாதுகாக்கப்படும் உரிமை எல்லா மாநிலங்களுக்கும் இருந்தாக வேண்டும் என்ற அடிப்படை எண்ணத்தோடு இங்கே தி.

ஒன்ருகும். 'இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும்' என்ற முறையீட்டை இலங்கைத் தூதுவரிடத்திலே அளித்து —மத்தியப் பேரரசுக்கும் அதை எடுத்துச்சொல்லி அன்றைக்கு நம்முடைய உணர்வுகளை இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பாக நாம் வெளிப்படுத்திக் கொண்டோம்.

செல்வா அவர்களைநேரிலே காண்பவர்களுக்கு இவராலா இப்படிப்பட்ட போராட்டங்களையெல்லாம் நடத்திட முடியும்? என்று எண்ணிடத்தோன்றும்!

ஆனல் அரசியல் சட்டத்தை எதிர்த்து எழுதப்பட்ட வாசகங்களையொட்டி

கலைஞர் பேசுகையில்குறிப்பிட்டதாவது:—

ஈழத்துக்காந்தி என்று எந்நாளும் போற்றப்படுகின்ற அருமைத் தலைவர் செல்வா அவர்களை இழந்து தவிக்கும் தமிழுலகத்தின் சார்பாக சென்னை மாநகரத்தில் நடைபெறும் இந்த இரங்கல் கூட்டத்தில் நாங்களும் எங்களுடைய கண்ணீர்க் காணிக்கையை மறைந்த அந்தப் பெருந்தலைவருக்கு செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் —உரிமை கொண்டுள்ளோம்.

ஏறத்தாழ 35 லட்சம் தமிழர்களுடைய தலைவராக ஈழத் திருநாட்டில் விளங்கிய அறப்போர் வீரர் மறைந்த செல்வா அவர்களாவார்கள்!

அவர் எண்பது வயது வரையிலே வாழ்ந்தார்; முழுமையான வாழ்வு வாழ்ந்தார் — நிறைவாழ்வு வாழ்ந்தார் என்று அவருடைய உற்ருர், உறவினர் சுற்றத்தார் அனைவரும் ஆறுதல் பெற்ருலும்கூட இன்னும் இருபதாண்டுக் காலத்திற்கு மேலான பணி அவரால் தமிழ்ச் சமுதாயத்திற்குத் தேவைப்பட்டது என்பதை யாரும் மறுத்திட இயலாது.

பேராசிரியர் எடுத்துக் காட்டியதுபோல் தமிழ்ச் சமுதாயம் தனக்கு மிகமிகத் தேவைப்படுகிற நேரத்தில் இப்படிப்பட்ட ஒப்பற்ற தலைவர்களை இழந்துவிட நேரிடுகிறது.

ஈழத்தில் அடுக்கடுக்காக நம்முடைய இதயத்தை ஊடுருவுகின்ற வேல்களென துன்பச் செய்திகள் கடந்த சில மாதங்களில் ஏற்பட்டு விட்டன.

திருச்செல்வம் மறைந்ததும்—

பெரும் வழக்கறிஞரும் தமிழர்களின் தலைவர்களில் ஒருவருமான ஜீ. ஜீ. பொன்னம்பலம் திடீரென இயற்கை எய்தியதும்—


மற்றுமொரு நம்பிக்கை நட்சத்திரமென நாம் நம்பிக்கொண்டிருந்த செல்வா அவர்கள் மறைந்து விட்டதும் சம்பிரதாயத்திற்காகச் சொல்லப்படுகின்ற வார்த்தையல்ல; உண்மையிலேயே ஈடுசெய்ய முடியாத பேரிழப்புத்தான்!

எனினும் இழப்புகளைத் தாங்கிக்கொண்டு அவர்கள் காட்டிய வழியில் நடைபோட வேண்டியது அவர்களால் வளர்க்கப்பட்ட, உணர்ச்சி யூட்டப்பட்ட தமிழ்ச் சமுதாயத்துப் பெருமக்களின் கடமையாகும்.

தமிழகத்திலே வாழ்கின்ற நாலரைக்கோடித் தமிழர்கள் மாத்திரமல்ல; ஈழத்திருநாட்டில் வாழ்கின்ற முப்பத்தைந்து லட்சம் தமிழர்கள் மாத்திரமல்ல; மற்றும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும் இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இலட்சக்கணக்கான தமிழர்கள் அவர்களுடைய உள்ளங்களிலெல்லாம் இன்றைக்கு அழிக்கமுடியாத அளவுக்குப் பதிந்துவிட்டிருக்கின்ற தமிழுணர்ச்சி—அந்த உணர்ச்சியின் வடிவங்களாகத் திகழ்ந்த தலைவர்களில் ஒருவர் ஈழத்து காந்தி செல்வநாயகம் அவர்கள்!

அவர்கள் தமிழகத்துக்கு கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்தார்கள். தமிழகத்தில் பலரையும் சந்தித்தார்கள். அவர்களை சந்திக்கின்ற பெரும் வாய்ப்பினை நானும் பெற்றேன்;

நடமாடக்கூட முடியாத அளவுக்கு நலிவுற்ற உடல்— ஓங்கிப்பேசமுடியாத அளவுக்கு வலுவிழந்த குரல்— நாம் சொல்வதைக்கூட சரியாக செவிமடுத்துக்கேட்க முடியாத அளவுக்கு மந்தமாகிவிட்ட செவிகள் — ஆனல் இவ்வளவு உடல் நலிவுகளுக்கிடையிலேயும் தமிழ் — தமிழர் — தமிழ்ச் சமுதாயம் — தமிழனுடைய



ஆணித்தரமான கருத்துக்களாகும்.

### செல்வா எழுப்பிய இரண்டு கேள்விகள்

இரண்டே இரண்டு கேள்விகளைக்கேட்டு எந்தக் கேள்விக்கு இலங்கையிலுள்ள

மு. கழகத்தை அண்ணு அவர்கள் கண்டார்கள்.

இலங்கையில் நடைபெற்ற போராட்டங்களையெல்லாம் அவ்வப்போது நாம் ஏடுகளிலே கண்டிருக்கின்ருேம்.

1958 ஆண்டு என்று கருதுகிறேன். இலங்கையில் நடை

கைது செய்யப்பட்டிருக்கிருர். தமிழர்களுடைய உரிமைக்காகப் போராடி தாம் வகித்த நாடாளுமன்ற பதவியையே துறந்திருக்கிருர்.

நாடாளுமன்றப் பதவி எனக்குத் தேவையில்லை.

## இச்சமயத்தில் அவரை இழந்தது ஈடிலாப் பேரிழப்பு!"

## தந்தை செல்வா அஞ்சலிக்கூட்டத்தில் கருணநிதி கண்ணீர்!

நாடு — தமிழர்களுடைய எதிர்கால வாழ்வு என்கிற இவைகளைப்பற்றிய நினைவு நலிவடையவில்லை — மங்கவில்லை, மறையவில்லை. மாருக அவைகளெல்லாம் அவருடைய உள்ளத்திலே உணர்ச்சி எரிமலைகளாக இருந்ததை என்னல் உணர முடிந்தது.

அப்படிப்பட்ட மாபெரும் தலைவரை நாம் இழந்திருக்கின்ருேம்.

இலங்கையிலே 1949ம் ஆண்டு, இங்கே நம்முடைய அண்ணு அவர்கள் தி.மு. கழகத்தைக் கண்டாரே அதே நேரத்தில்தான் இலங்கையில் செல்வா அவர்கள் தமிழர்களுக்கான ஒரு இயக்கத்தை உருவாக்கினர்.

1949ம் ஆண்டு தமிழர்களுக்கான இயக்கத்தை உருவாக்கியபொழுது அவர் வெளியிட்ட கருத்துக்கள்

தமிழன் பதிலளிக்கவேண்டும் என்கிற விடையையும் விளக்கமாக எடுத்துச்சொன்னர்.

இலங்கையில் தமிழன் எல்லா உரிமைகளையும் இழந்து இரண்டாந்தரக் குடிமகளுக வாழ்வதா? அல்லது அவன் எல்லா உரிமைகளையும் பெறுகின்ற அளவுக்கு இலங்கையின் அரசியல் சட்டத்தைத் திருத்துகின்றபோராட்டத்தில் ஈடுபடுவதா? இந்த இரண்டு கட்டங்களில் இரண்டாவது கட்டம் சங்கடமானதுதான் இன்னல்களைத் தரக் கூடியதுதான்; இடையூறுகளைச் சந்திக்கவேண்டியதுதான் என்ருலும்கூட நான் இரண்டாவது கட்டத்தையே விரும்புகிறேன் என்ற வீரக் குரலில் அவர் தெரிவித்தார்.

[illegible] இன் அடிப்படையிலேதான் இந்தியாவில் தமிழ்ச் சமுதாயம் இரண்டாந்தர குடி மக்

பெற்ற ஒரு எழுத்துப் போராட்டம் 'சிறீ' என்கிற எழுத்தை அழிக்கின்ற ஒரு போராட்டம், அந்த எழுத்தை தமிழனுடைய இல்லத்தின் சுவர்களில் தமிழனின் தோட்டத்து மரங்களில் ஏன் தமிழனின் நெற்றியில் —ஏன் தமிழனின் முதுகில் — ஏன் தமிழ்மான மங்கையரின் மார்பில் எழுதக்கூடிய அளவுக்கு கொடுமையான இயக்கத்தை இலங்கையிலுள்ள சில வெறியர்கள் தமிழர்களுக்கு எதிராக நடத்திய பொழுது அந்த இன்னலைத் துடைக்க தமிழகத்திலுள்ள தி. மு. கழகம் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைக் காட்டுகின்ற வகையில் அண்ணு தலைமையில் இலங்கைத் தமிழர்களுக்கான பாதுகாப்புப் பேரணி நடத்தியதை நாடு நன்ருக அறியும்!

சென்னை மாநகரில் நடைபெற்ற அந்தப்பேரணி வரலாற்றில் இடம்பெறத்தக்க

நான் தமிழர்களுடைய உரிமைக்காகப்போராடுகிறேன் அதற்குச் சான்ருக அந்தப் பதவியைத் துறக்கிறேன் என்று சொல்லி இருக்கிருர். நாடாளுமன்றப் பதவியையே துறந்த செல்வா அதே இடத்திலே மீண்டும் போட்டியிட்டு அதிக வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெற்று தான் ஏற்றுக் கொண்ட கொள்கை சரியானதுதான் என்பதை மெய்ப்பித்துக்காட்டி இருக்கின்ருர்.

இப்படி எல்லா விதத்திலும் தமிழ்ச் சமுதாயத்திற்காகப்போராடிய மாபெரும் தலைவரை இழந்தோம்.

அருமை நண்பர்கள் ப. உ. சண்முகமும், வீராசாமியு எடுத்துக் காட்டியதைபோல் நானே பேராசியரோ அல்லது இருவரி ஒருவரோ ஈழத்துக்கு சென்று மறைந்த பெரி

—6-ம் பக்கம் பார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்


## மலையகத்தில் மற்றோர் றொடீசியா!

மலையகத்தில் நடைபெற்றுவரும் நெஞ்சு பதைக்கும் சம்பவங்கள், மலையகம் மற்றோர் றொடீசியாவாக மாறி வருவதையே எடுத்துக்காட்டுகிறது.

உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டுமென்று வாய்கிழியச் சமதர்மம் பேசப்படுகிற இந்த நாட்டில் காடாகக் கிடந்த மலையகத்தை வெட்டித் திருத்தி அங்கு ரப்பரையும் தேயிலையையும் பயிரிட்டு, அவற்றுக்கு தம் உடலையே எருவாக்கி உதிரத்தை நீராக்கி, பொன்பொழியும் பூமியாக்கிய தோட்டத்தொழிலாளிக்கு குடியிருக்க நிலமில்லையென்று கைவிரிக்கப்படுகிறது. காரணம் அவர்கள் தமிழர்கள் என்பதுதான்!

1949ம் ஆண்டு அவர்களது குடியுரிமை, வாக்குரிமை பிடுங்கப்பட்டது — அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினுல்!

இன்று அவர்களது தொழிலுரிமை— நிலவுரிமை மறுக்கப்படுகிறது — அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தினுல்!

இந்த நாட்டில் 'தேசியமயம்' என்று கூறினுல்— அதன் பொருள் 'சிங்கள மயம்' என்பதை நாம் கடந்த கால் நூற்ருண்டாக பன்னிப் பன்னிக்கூறிவந்திருக்கிறேம்! எத்தனையோ தேசிய மயங்கள், இறுதியில் சிங்கள மயமாகிவிட்டதை தமிழ் சமுதாயம் யதார்த்த பூர்வமாகக் கண்டிருக்கிறது; இன்று தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்கள் அனைத்தும் சிங்கள மயமாகி வருகின்றன.

தோட்டநிலங்கள் பிரித்துக் கொடுக்கும்போது, சிங்களவனுக்கு மட்டுமே பகிர்ந்தளிக்கப்படுகிறது; இலங்கைக் குடியுரிமை பெற்ற மலையகத் தமிழ் தொழிலாளிக்குக்கூட மலையகத்தில் ஒரு துண்டு நிலமும் தருவதில்லையென்ற இனவெறிக் கொள்கையை நடைமுறையில் பின்பற்றுகிறது சிங்கள அரசு!

நெற்றிவியர்வை நிலத்தில் விழ தமிழன் பண்படுத்திய நிலம் சிங்களவனுக்கு வழங்கப்படுகிறது; அதே நிலத்தில் உழைத்த தமிழனுக்கு பங்கு இல்லை! இத்தகைய கொடுமை உலகில் எங்கும் நடைபெறவில்லை— றொடீசியா, தென்னுபிரிக்கா போன்ற இனவெறி நாடுகளைத் தவிர!

சிங்கள அரசின் இந்த இனவெறிக் கொள்கை காரணமாகவே இலட்சுமணன் என்ற இளம் தமிழ்க்காளை பொலிசாரின் துப்பாக்கி வேட்டுக்கு தன் இன்னுயிரைப் பலி தந்தான்! இந்த இனவெறிக் கொள்கை காரணமாகவே தமிழ்த் தொழிலாளர்கள் இது நாள்வரை குடியிருந்த கூடுகள்கூட கொழுத்தியெரிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானேர் வீதிகளில் அகதிகளாகத் தவிக்கிருர்கள்!

அரசாங்கம் தனது பாரபட்ச இனவெறிக் கொள்கையை கைவிட்டு—தமிழ் தொழிலாளிகளுக்கும் நிலம் வழங்க முன்வராவிடின்—மலையகத்தில் வீணுக இரத்தக் களரிகள் பெருகும்; தமிழுயிர்கள் அநியாயமாக மடியும்!

தமிழுயிர்கள்தானே போகட்டும் என்று அரசாங்கம் அலட்சிய மனப்பான்மை காட்டுமாஞல் — அதன் விளைவுகள் இன்னும் விபரீதமாகும் என்று எச்சரிக்கிறேம்!

மலையகத் தமிழர்களுக்கு மலையகத்தில் நிலம் வழங்காவிடின் அவர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலாவது குடியமர்த்தி, அவர்கள் விவசாயத்திலீடுபட அங்கு முடிக்குரிய நிலங்களை வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும்!

---

## போட்டியின்றித் தெரிவுசெய்வோம்!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் உடுப்பிட்டித்தொகுதியில் திரு. எஸ். இராசலிங்கம் அவர்கள் தேர்தலில் போட்டியிடுகிருர். சிறுபான்மைத் தமிழர்களுக்கு கொடுத்த வாக்குப்படி தமிழர் விடுதலைக்கூட்டணி திரு. இராசலிங்கம் அவர்களை உடுப்பிட்டித்தொகுதியில்வேட்பாளராக துணிவோடு நிறுத்தியிருக்கிறது!

திரு. இராசலிங்கம் அவர்களின் வெற்றிக்கு உடுப்பிட்டித்தொகுதியின் முன்னுள் பா. உ.க்களான திரு. ஜெயக்கொடி அவர்களும் திரு. சிவசிதம்பரம் அவர்களும் முன்னின்று உழைத்து வருகிருர்கள்! சாதி, தீண்டாமை, போன்ற சமுதாயச் சீர்கேடுகளிலிருந்து விடுபட்டு, தமிழினம் தன்னை தானே ஆளுவதற்கு—அதாவது சுதந்திரத்துக்கு— தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்டு விட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இது ஓர் அருமையான சந்தர்ப்பமாகும்!

தீண்டாமை, சாதிபோன்ற அநீதிகளை தமிழ் சமுதாயத்திலிருந்து அகற்றுவதிலும், சிறுபான்மைத் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டுமென்பதிலும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கருத்துக்கு வேறு எந்த அரசியற் கட்சியாவது — அல்லது தனிப்பட்ட மனிதர்களாவது விரோதமாக இருப்பார்கள் என்று நாம் நினைக்கவில்லை!

இந்த அடிப்படையில் உடுப்பிட்டித்தொகுதியிலிருந்து திரு இராசலிங்கம் அவர்களை அனைவருமாக சேர்ந்து போட்டியின்றி தெரிவுசெய்யும் ஒரு வாய்ப்பு ஏற்படுமாஞல் அஃது ஓர் மகத்தான சாதனையாக அமைவதுடன், சிறுபான்மைத் தமிழர்கள் உயர் சாதித்தமிழர் என்று கூறப்படுவோர் மீது கொண்டுள்ள அச்சமும், ஐயமும் அகன்று தமிழினத்தின் ஒற்றுமை மேலும் பலப்படும். இந்த முயற்சியில் தமிழ் சமுதாயத்திலுள்ள பெரியவர்கள் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேம்!

## 'சுதந்திரத் தமிழ் ஈழம் அமைப்பதே செல்வாவுக்கு நமது அஞ்சலி.'

—அமிர்

தமிழினம் ஒருதேசிய இனம், அதற்கு சுயநிர்ணய உரிமையுண்டு என்பதனை உலகுக்கு எடுத்துக்காட்டிய மகான் எனது தலைவர் செல்வநாயகம். சுதந்திர தமிழீழம் என்னும் தாரக மந்திரத்தை விட்டுச்சென்றுள்ளார். அதனைக் கடைப்பிடித்து அவரது இலட்சியத்தை நாம் அடைவோம். தமிழினம் இனி தனித்துவத்துடன் தன்னைத் தானே ஆளவேண்டும், சுதந்திர தமிழீழத்தை அமைக்க வேண்டும். இதுவே அவருக்குச்செய்யும் அஞ்சலியாகும்.

—8ம் பக்கம் பார்க்க

---

## தமிழர் விடுத...

—1-ம் பக்கத்தொடர்

நடைபெறும் என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. புதிய தேசிய பேரவையின் முதலாவது கூட்டம் ஆகஸ்ட் 26ம் திகதி கூடும்.

ஜுலை 21ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்ற பின்னர், தேசிய பேரவை கூடும் திகதியை ஆகஸ்ட் 26 வரை பின்போட்டிருப்பதேன்? ஏறத்தாழ ஒரு மாதம் ஏன் தள்ளிப்போடவேண்டும்? உலகத்தில் ஒரு நாட்டிலும் இதுவரை இப்படி நடைபெற்றதில்லையென்று அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தேசிய அரசுப்பேரவை கலைக்கப்பட்டதையடுத்து தமிழர் விடுதலைக்கூட்டணி தன்னை ஓர் அரசியற் கட்சியாக பதிவுசெய்துகொள்ளவிருக்கிறது. கூட்டணியின் தேர்தல் சின்னமாக உதயசூரியனே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

தமிழ்ஈழத்தில் மொத்தம் 23 தொகுதிகளில் 24 கூட்டணி வேட்பாளர்கள்போட்டியிடுகிருர்கள். தமிழ்ஈழத்துக்கு வெளியே கொழும்பு மத்தியிலும், மலையகத்திலும். கூட்டணி ஆதரவு பெற்ற இரு வேட்பாளர்கள் போட்டியிடுகிருர்கள். கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் கூட்டணியின் இலட்சியங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதென்றும் முழுநேர ஊழியர்களாக இயங்குவதென்றும் உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டு தந்தை செல்வாவின் சமாதிமீது சத்தியம் எடுப்பார்கள்.

---

# மே-22

1972 மே 22ம் நாள்தான் ஈழத் தமிழ் இனத்தை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி, அடிமைப்படுத்தும் புதிய குடியரசு அரசியல் சட்டம் தமிழ் மக்கள் மீது துப்பாக்கி முனையில் பலவந்தமாக திணிக்கப்பட்ட நாளாகும்; தமிழ் ஈழம், சிங்கள சிறீலங்காவுக்கு 'காலனி' நாடாக்கப்பட்ட நாளாகும்!

அந்த நாள் தொட்டு, ஒவ்வோராண்டும் மே 22ம் நாளில் தமிழ் சமுதாயம் தன்மீது வேற்று நாட்டவர்களான சிங்களவர்களால் திணிக்கப்பட்ட அடிமை அரசியல் சட்டத்தை எதிர்த்து தன்னுடைய எதிர்ப்பைக்காட்டி வருகிறது. 1975ம் ஆண்டு மே 22ல் — சட்டமறுப்பு நடைபெற்றது. சென்ற ஆண்டு மே 22ல் — 'தனிநாடு' தீர்மானமாகிய வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை சட்டத்தை மீறி அச்சிட்டு விநியோகித்து நம் தலைவர்கள் நால்வர் கைதாகினர். நாவலர் அமிர்தலிங்கம், பண்டிதர் இரத்தினம், க. துரைரத்தினம், வி.என். நவரத்தினம் ஆகியோர் அவசர காலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கெதிராக தொடரப்பட்ட ட்ரயல்—அற்—பார் வழக்கு, ஈழத்தமிழர் பிரச்சினையை உலகறிய செய்தது.

இந்த ஆண்டு மே 22ம் நாளும்—அதாவது — இன்று —சிங்கள சிறீலங்கா தனது 6வது குடியரசு நாளைகொண்டாடும் அதே சமயத்தில் தமிழ் ஈழம் அடிமை அரசியல் சட்டத்தை நிராகரித்து சுதந்திரத் தமிழ் ஈழத்தை மீட்பதென உறுதி பூணுகிறது!

அடிமை அரசியல் சட்டத்தை ஆதரித்துக் கையெழுத்திட்ட தமிழின விரோதிகளுக்கு — திருவாளர்கள் அருளம்பலம், தியாகராசா, மார்ட்டின், இராசன் செல்வநாயகம் ஆகியோருக்கு யூலை 21ம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் சரியான பாடம் புகட்டவும் தமிழ் சமுதாயம் உறுதி பூணட்டும்!

## கொழும்பில் த. இ. பேரவை கண்டனக்கூட்டம்!

குடியிருக்க நிலம் கோரிய மலையகத் தமிழ் இளைஞன் இலட்சுமணன் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டதை கண்டித்து த. இ. பேரவையின் கொழும்புக் கிளையினர் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 23-5-77 திங்கட்கிழமை மாலை திரு. ஆ. ரகுபதிபால சிறிதரன் தலைமையில் ஓர் கண்டனக் கூட்டத்தை நடத்துகின்றனர். இக்கூட்டத்தில் இ. தொ. கா. தலைவர் சௌ. தொண்டமான், மு. சிவசிதம்பரம், வி. தருமலிங்கம், எம். எஸ். செல்லச்சாமி, எஸ். கெங்கரத்தினம், காசிஆனந்தன், மாவை சேனுதிராசா, வண்ணை ஆனந்தன், திருமதி சாந்தினி ஞானகரன் ஆகியோர் பேசுகிருர்கள்.

---


## இப்பொழுது விற்பனையாகின்றது!

''புத்தொளி'' எழுதிய

### தமிழர் செல்வம் செல்வா

மூதறிஞரின் முழு அரசியல் வாழ்வும் மற்றும் இளமைப்பருவம், குடும்ப விபரம் அனைத்தும் இந்நூலில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

விலை ரூபா. 2/-

விபரங்களுக்கு:

தமயந்திப் பதிப்பகம், அச்சுவேலி.


## காணி நிலம் வாழ்வதற்கு கேட்டான் மலையகத் தமிழன்!

## அவனுக்கு கிடைத்ததோ எட்டு அடி நிலம் இனியேனும் சிந்திக்குமா தமிழ் குலம்?

''மலையகத் தமிழன் சிவனு லெட்சுமணன் தான் உயிர்வாழ நிலம் தேவை என்று காணிப்பங்கீடு பெறப்போனுன்'' — அங்கே சிங்கள ஏகாதிபத்தியத்தின் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டான். அவனுடைய சடலம் எட்டு அடி நிலத்தில் புதைக்கப்பட்டு விட்டது. வாழ நிலம் கேட்ட தமிழனுக்கு ஈற்றில் கிடைத்ததோ எட்டு அடி நிலம்!

—காசி ஆனந்தன்

(மட்டுநகரில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் பேசியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுமை மறப்போம்! வெற்றி குவிப்போம்!!

**அன்பு நண்பா,**

தேசிய அரசுப் பேரவை மே 18ம் திகதியுடன் கலைக்கப்பட்டுவிட்டது. பொதுத்தேர்தலுக்கான நாள் ஜூலை 21 என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஜூன் 6ம் நாள் வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன!

கூட்டணிக்குள் வேட்பாளர் நியமனத்தில் குத்து வெட்டு நடக்கிறது; இந்தக்குத்து வெட்டின் பயனாக கூட்டணியே குலைந்துவிடும்; தமிழின ஒற்றுமையே சிதைந்துவிடும்; என்று மெத்த ஆர்வத்தோடும், அக்கறையோடும் எதிர்பார்த்திருந்த தமிழின விரோதிகளின் முதுகெலும்பு இன்றைக்கு முறித்தெறியப்பட்டுவிட்டது; அவர்களது நச்சுப்பல் பிடுங்கியெறியப்பட்டது!

பொதுத்தேர்தல்—நமது விடுதலைப்பாதையில் நாம் சந்தித்தே தீரவேண்டிய ஒரு சனியன்; ஆனால் பொதுத்தேர்தலைவிட, தமிழின ஒற்றுமையைக் கட்டிக் காப்பதே நம் கடன்; பொதுத்தேர்தலையொட்டி தற்காலிகமாகத் தோன்றிய சிக்கல்களால்—கூட்டணியின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் எந்த விதத்திலும் உடைய விடமாட்டோம்; சிதைய விடமாட்டோம்; என்கிற அந்த வைர நெஞ்சத்தோடும் உறுதியோடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்களான அண்ணன் அமிர்தலிங்கமும், சிவசிதம்பரம் அவர்களும் நிதானமாகச் சிந்தித்து நியாயமான முடிவுகளை எடுத்திருக்கிறார்கள்; மூதறிஞர் தந்தை செல்வா அவர்களிடம் பயிற்சி பெற்றவர்கள் தாம் என்பதை அவர்கள் நிரூபித்து இருக்கிறார்கள்!

ஏ, அப்பா, கடந்த ஒரு திங்களுக்கிடையில் நாளேடுகள் நமது தமிழ் மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி வைத்த மனக்குழப்பங்கள் தாம் எத்தனை? தமிழர் விடுதலைக் கூட்டணியே சிதறிச் சின்னபின்னப்பட்டுவிட்டது போன்ற ஓர் தோற்றத்தினை தமிழ் மக்கள் உள்ளங்களிலே ஏற்படுத்திவிட, நாளேடுகள்—குறிப்பாக 'தினபதி' — செய்துவிட்ட ஈனத்தனமான பிரசாரங்கள் தாம் எத்தனை எத்தனை? அங்கு சத்தியாக்கிரகம், இங்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம், மகஜர் கையளிப்பு, கையெழுத்து சேகரிப்பு, கொடும்பாவி எரிப்பு, என்று துரும்பையும் தூணாக்கிக்காட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தமிழின ஒற்றுமையையும் குலைத்துவிட நடைபெற்ற சதி முயற்சிகள் தாம் எத்தனை?

குறிப்பாக மூதறிஞர் தந்தை செல்வா அவர்களுக்கு அடுத்தபடியாக அனைத்துத் தமிழ் ஈழமும் தனது தலைவனாக ஏற்றுக்கொண்டிருக்கிற அண்ணன் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களின் தோற்றத்துக்கு மாசு கற்பித்திடும் நோக்குடன், அவர்மீது திட்டமிட்டு பழிசுமத்தப்பட்டன; இருபத்து நான்குமணி நேரமும் தமிழ் சமுதாயத்துக்காகவே உழைத்துவரும் அந்த உத்தமருக்கு எதிராக இல்லாததும் பொல்லாததும் ஏவிவிடப்பட்டன; எதையும் தாங்கும் அந்த இதயம், இனத்தின் ஒற்றுமைக்காக எத்தனையோ இழிவையும் பழியையும் தாங்கிக்கொண்டது!

நண்பா, தமிழர் விடுதலைக்கூட்டணியின் நியமனசபை—தமிழ் சமுதாயத்தின் இரு கண்களான தளபதி அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகிய இருவரினது ஒப்புதலோடும், ஆலோசனையோடும் கூட்டணியின் வேட்பாளர்கள் இவர்கள் தாம் என்பதை அறிவித்துவிட்டது. தமிழ் ஈழத்தில் 24 கூட்டணி வேட்பாளர்களும், மலையகத்திலும் கொழும்பு மத்தியிலும் கூட்டணி ஆதரவுபெற்ற வேட்பாளர்களுமாக மொத்தம் 26 வேட்பாளர்கள் கூட்டணி சார்பிலே போட்டியிடுகிறார்கள்!

**கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் நாம் விரும்பியிருந்த — நாம் எதிர்பார்த்திருந்த— நாம் ஆதரித்த — சிலரது பெயர்கள் இடம்பெறாமல் போயிருக்கலாம்; அல்லது இடம் பெற்றிருக்கலாம். ஆனால் கூட்டணியின் வேட்பாளர்கள் இவர்கள்தாம் என்பது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் நம்முடைய சுயவிருப்பு வெறுப்புக்களையெல்லாம் ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டு— கூட்டணியின் வெற்றிக்காக முழுமூச்சுடன் உழைப்பதே உண்மையான இலட்சிய வீரனின் — இயக்கத்தொண்டனின் கடமையாகும்!**

தியாகம்தான் இனத்தை ஒற்றுமைப்படுத்தக் கூடியது; 1972ம் ஆண்டு

## அரசியல் மடல்

உருவாகிய தமிழர் கூட்டணி, தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளிலும்வெளியிலும் சிந்திய கண்ணீராலும், செந்நீராலும்தான் கட்டிவளர்க்கப்பட்டது. தமிழினத்தின் ஒற்றுமையைக் கட்டி வளர்ப்பதற்கும், குலைந்துவிடாமற் பாதுகாப்பதற்கும் நமது சொந்த விருப்புவெறுப்புக்களை தியாகம் செய்ய நாம் தயாராக இருந்திட வேண்டும்!

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் — ஈழத்தமிழினம் தனிநாடு எனும் இலட்சியத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் நடைபெறும் முதலாவது பொதுத்தேர்தல்; தமிழ் ஈழமக்கள் கூட்டணியின் தனிநாடு கோரிக்கை மீது என்ன தீர்ப்பு வழங்கவிருக்கிறார்கள் என்பதை அறிந்திடுவதில் உலகநாடுகள் முழுவதும் மெத்த ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. இந்நிலையில் நமக்குள் இருக்கும் அற்ப வேற்றுமைகளை மறந்து கூட்டணியின் வெற்றிக்காக முழு மூச்சுடன் உழைத்திட உறுதி பூணுவோம்!

**இந்தத் தேர்தலில் கூட்டணி வேட்பாளர்யார்-அவரது தகுதியென்ன-என்பது பற்றிய தனிப்பட்ட ஆராய்ச்சிகளுக்கு இனி இடமில்லை; கூட்டணியொன்றே நம் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கவேண்டும்; தனித் தமிழ் ஈழம் என்கிற இலட்சியமொன்றே நம் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் கலந்து நின்று நமக்கு வேகத்தை ஊட்டவேண்டும்! உதயசூரியன் ஒன்றே உள்ளத்தில் நிறைந்து ஒளிதந்திட வேண்டும்!**

உலகநாடுகள் இன்றைக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் தனிப்பட்ட தகுதியைப்பற்றியோ — தகுதியின்மை பற்றியோ அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டவில்லை; அவைபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கவும் இல்லை! தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'தனிநாடு' என்ற இலட்சியத்தை —வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை —தமிழ் ஈழ மக்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களா இல்லையா? தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னரும் தமிழ்ஈழ மக்கள் ஒற்றுமையாகவும் கட்டுப்பாட்டுடனும் ஓரணியின்கீழ் இருக்கிறார்களா இல்லையா — என்பதையே இந்தத் தேர்தல் முடிவைக்கொண்டு கணக்குப்போடவிருக்கின்றன உலகநாடுகள்! இந்த உண்மையை கூட்டணித் தொண்டன் ஒவ்வொருவனும் தனது நெஞ்சில் பதித்துக்கொள்ள வேண்டும்!

பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தின் முன்னர், வங்காளிகளின் தேசிய விடுதலை இயக்கமான 'அவாமி லீக்' வங்கத் தேர்தலில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பதுவீதம் வெற்றியீட்டியதுபோல—எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்ஈழத்தில், ஈழத் தமிழினத்தின் தேசிய விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணி நூற்றுக்கு நூறு வீதம் பெரு வெற்றியீட்டவேண்டும்! இந்த வெற்றியே உலகத்தின் பார்வை நம் மீது விழுவதற்கு வழி வகுக்கும்!

எனவே நண்பா, வேற்றுமை மறப்போம்; பேதங்களைக் குழிதோண்டிப் புதைப்போம்; கருத்து வேறுபாடுகளை துறப்போம்! நம்முள் சண்டையிட்டாலும் நாம் சகோதரர் என்பதை உலகறியச் செய்திடுவோம்! தமிழின ஒற்றுமைக் கோட்டையான கூட்டணிக்கு வெற்றி குவிப்போம்! அதன்மூலம் தமிழ்ஈழ சுதந்திர வேட்கையை உலகறிய வைப்போம்! உதயசூரியன் கொடியை உயரப்பறக்க விடுவோம்! காலம் சிறிது; கடமை பெரிது; இதை உணர்ந்து இன்றே எழுந்திடுவோம்; இதய சுத்தியுடன் செயற்படுவோம்!

**தமிழ் ஈழத்தின் சுதந்திரக்கோரிக்கையை ஜனநாயகரீதியில் உலகறியச் செய்யும் நாளாக ஜூலை 21ம் நாளை மாற்றியமைப்போம்!**

**உன் அன்புத் தோழன்.**

கோவை-மகேசன்

## காசி ஆனந்த ...

—1-ம் பக்கத் தொடர்

வலத்தை நடத்துவது என்று காசிஆனந்தன் தலைமையிலான போராட்டக் குழுவினர் முடிவு செய்தனர். முடிவு மட்டுநகர் அரசாங்க அதிபருக்கும் மட்டுநகர் பொலிஸ் அதிபருக்கும் உரிய நேரத்தில் அறிவிக்கப்பட்டது. திட்டமிட்டதுபோல் 15-5-77 அன்று மாலை 4.00 மணியளவில் ஊர்வலத்தில் பங்கு கொள்வதற்காக தொண்டர்கள் பெருமளவில் திரளத்தொடங்கி விட்டார்கள். அதே நேரத்தில் கூட்டணி அலுவலகத்திலிருந்து ஊர்வலம் புறப்படவிருந்த வீதியின் பக்கத்தே—தமிழர் கூட்டணி அலுவலகத்தின் எதிர்ப்புறமாக ஆயுதம் தாங்கிய பொலிசாரும் பெருமளவில் திரளத்தொடங்கி விட்டார்கள்.

நாலரை மணிக்கெல்லாம் கூட்டணி அலுவலகத்தில் இருந்த தொண்டர்கள் வரிசைக் கிரமத்தில் நிறுத்தப்பட்டு ஊர்வலத்துக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. ஐநூற்றுக்கும் அதிகமான தொண்டர்கள் அணி வகுத்து நின்றார்கள். இவர்களில் இருதயபுரம் தமிழ் மகளிர் பேரவையைச் சேர்ந்த இருபது பெண்களும் கலந்துகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கவிஞர் காசிஆனந்தன் திரு. பாலசிங்கம் திரு. அம்பலவாணர், திரு. வேணுதாஸ், திரு. நடேசானந்தன, திரு. பரமதேவா ஆகியோர் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு வீதியில் இறங்கியதும் —துப்பாக்கிகள், குண்டாந்தடிகள், கண்ணீர் புகைக் குண்டுகள், தடுப்பு கேடயங்கள் தாங்கிய பொலிசார் [illegible] ஊர்வலத்தை நிறுத்துங்கள் என்று தடுத்து மறித்தார்கள். ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி தலைவர்களும் தொண்டர்களும் அதே இடத்தில் உட்கார்ந்து மௌனவிரதம் அனுஷ்டித்தார்கள். ஆனால் தொண்டர்களின் கைகளில் இருந்த நூற்றுக்கணக்கான சுலோக அட்டைகள் மௌனம் சாதிக்கவில்லை அவைகள் ஆட்சியாளருக்கு எதிராக ஓங்கி முழங்கிக்கொண்டேயிருந்தன.

பின்பு தொண்டர்களை அலுவலக முன்றலுக்கு அழைத்த கவிஞர் அங்கே மிகப்பெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினார். பெருந்திரளான மக்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். திரு. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கவிஞர் காசி ஆனந்தன் உள்ளத்தைத் தொடும் ஒரு கருத்தை வெளியிட்டார். அக்கருத்து இதுதான்—

''மலைநாட்டில் ஒரு தமிழன் தன்னுடைய உயிர்வாழ்வுக்கு ஒரு காணித்துண்டு கேட்டுப் போனான். அவனுக்கு கிடைத்த காணித்துண்டு 8 அடி நிலம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழத்தமிழர்களின் உரிமைப்போருக்கு செல்வாவின் ஆவி துணை நிற்கும்!"

## சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் நம்பிக்கை!

ஈழத் தமிழர்களின் ஈடு இணையற்ற தலைவரான திரு. செல்வநாயகம் அவர்கள், ஏப்ரல் 26ஆம் தேதியன்று இரவு யாழ்ப்பாணத்தில் காலமான செய்திகேட்டு வருந்துகிறோம்.

இலங்கை முழுவதற்குமான ஆட்சி மொழிகளிலே ஒன்றாகத் தமிழை ஆக்குவதற்கும், தமிழ் மாநிலமும் சிங்கள மாநிலமும் கொண்ட சமஷ்டி அரசை இலங்கையிலே உருவாக்கவும் அவர் அரும்பாடுபட்டு வந்தார். அந்தப் பணிமுடிவதற்கு முன்பே அவர் இயற்கை எய்திவிட்டார்.


இலங்கைத் தமிழர்களின் இதயக்கோயிலிலே அவர் இருந்து வந்தார். இது வருணனையல்ல; வரலாறு.

திரு. செல்வநாயகம் 80 வயதையடைந்துவிட்ட முதியவர் என்றாலும், இலங்கை வாழ் தமிழ் இளைஞர்களின் நம்பிக்கைக்குரிய தலைவராகவும் விளங்கிவந்தார். சிங்களவர்களின் பிடிவாதம் காரணமாக சுதந்திரத்தமிழ் நாடுகோரும் இளைஞர் புரட்சிப்படை ஒன்றும் இலங்கையில் தோன்றிவிட்டது. அந்தப் படையினரும் முதுபெருந் தலைவரான செல்வாவிடம் மதிப்பு வைத்திருந்தனர். உண்மையில்செல்வாவின் மறைவு ஈழத்தமிழருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமிழரசுக் கழகத்திடம் கொள்கை ரீதியாக உறவு கொண்டிருந்தார் திரு. செல்வநாயகம். இந்தியத் தமிழகம் வரும்போதெல்லாம் என்னைச் சந்தித்துவந்தார். நான் ஈழத்திற்குச் செல்லும் போதெல்லாம் என்னைத் தம் இல்லத்திற்கு அழைத்து விருந்தளித்து உபசரிப்பதிலே மிகுந்த ஆர்வங் காட்டி வந்தார்.

திரு. செல்வநாயகம் அவர்களுடைய பிரிவானது ஈழத் தமிழர்களை துக்கக் கடலில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தையே இல்லை. இந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு அவர்களுக்கு சிறிது அவகாசம் தேவைப்படும். ஆயினும், அமரராகிவிட்ட திரு. செல்வாவின் ஆவி இலங்கைத்தமிழர்களின் உரிமைப் போருக்கு இனியும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

அமரர் செல்வாவின் ஆன்மா அமைதிபெற இறையருளைப் பிரார்த்திக்கிறேன். அவரது பிரிவால் வருந்தும் இலங்கைத் தமிழருக்கும், அவர்களின் பிரதிநிதித்துவ அமைப்பான தமிழரசுக் கட்சிக்கும், செல்வாவின் குடும்பத்தினருக்கும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



ம. பொ. சிவஞானம்
தலைவர், தமிழரசுக் கழகம்

---

## செல்வா உருவாக்கிய ஈழத்தின் புரட்சிக்கவிஞன்!

### 'காசி'யைப்பற்றி கலைஞர் மு. க.

இலங்கையில் காசிஆனந்தன் என்கிற புரட்சிக் கவிஞர் இருக்கிறார். ஏறத்தாழ பாரதிதாசன் பரம்பரை என்று சொல்லலாம். அப்படிப்பட்ட புரட்சி எரிமலைகள் அவரது கவிதைகளில் வெடிக்கும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திலே கலந்துகொண்டு அவர் எழுதிய கவிதைகளின் காரணமாகப் பலமுறை சிறைக் கொட்டடிகளில் அடைபட்டுக் கிடந்தவர் அவர்.

அவர் எழுதுகிறார் ஒரு கவிதையில்—

"இமயத்தில் வில்லும் —புலியும்—மீனும் எழுதிய தமிழன் சொந்தவீட்டுச் சுவரில் 'தமிழ் வாழ்க' என்று எழுதினாலும் பொலிஸ்காரன் துரத்துகிறானே."

—இந்த உணர்ச்சியை இலங்கையிலுள்ள தமிழன் மாத்திரமல்ல; இங்கே உள்ள தமிழனும் பெறுவதிலே என்ன தவறு இருக்க முடியும்?

இமயத்திலே நாங்கள் இலச்சினையைப் பொறித்தோம் என்று சொல்லுகிறோம்; ஆனால் அதேநேரத்தில் 'தமிழ் வாழ்க' என்று சொன்னால்,

'நீ தமிழ் வாழ்க என்று சொன்னாய், ஆகவே அது குற்றம்' என்று கூறாமல் எப்படி குற்றம் சாட்ட அடிப்படை அமைக்க முடியுமோ அதை அமைத்துக் கொண்டு நீ இப்படிச் சொன்னாய் என்று இட்டுக் கட்டி புனைந்துரையைச் சொல்லி—இன்னமும் தமிழனுடைய நிலைமை நம்முடைய நாட்டிலும் பரிதாபகரமாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் காசிஆனந்தனின் கவிதையை எடுத்துச் சொன்னேன்.

அவர் இன்னொன்றையும் சொல்கிறார்—

"இராவணன் மட்டுமா தமிழன்? இல்லை; இராமனும் தமிழனே" என்று ஆச்சரியமான ஒன்றைச் சொல்லி அந்த விடுகதையை அவரே விடுவிக்கிறார்.

"இராவணன் மட்டுமா தமிழன் இல்லை இராமனும் தமிழனே! எந்த ராமன் தசரதராமனா — கோசலைராமனா — சீதாராமனா— கோதண்டராமனா இல்லை ஐயா இல்லை; தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து எதிரியின் எச்சில் சோற்றைச் சாப்பிடுகிறானே அந்த சாப்பாட்டு ராமனும் தமிழனே!"

—அப்படிப்பட்ட புரட்சிக் கவிஞர்கள் ஈழத் தமிழர்களுக்கு மத்தியிலே தோன்றினார்களென்றால் அதற்கெல்லாம் காரணம் மறைந்த பெரியவர் செல்வா அவர்களுடைய கொள்கை — அவர் ஊட்டிய உணர்ச்சி — அவர் நடத்திய வீரப் போராட்டங்கள்!

— சென்னை மண்ணடியில் நடைபெற்ற தந்தை செல்வா இரங்கற் கூட்டத்தில் கலைஞர் மு. கருணாநிதி — (முரசொலி 7-5-77)

---

## இன்னும் 20 ...

—3-ம் பக்கத் தொடர்

வருக்கு மரியாதை செலுத்த வேண்டும் — மலர் வளையம் வைத்து வணங்கவேண்டும். வீர வணக்கத்தைத்தெரிவிக்க வேண்டும் என்று கருதினோம் — ஏங்கினோம் என்றாலும் அதற்கான வெளிநாட்டுப் பயண அனுமதிச் சீட்டு எங்களுக்கு உடனடியாகக் கிடைக்கவில்லை.

ஏற்கெனவே அந்த அனுமதிச்சீட்டைப் பெற்றிருந்த ப. உ. ச. வீராசாமி ஆகியோர்தான் செல்ல முடிந்தது.

இலங்கை—குறுக்கே சென்றால்கூட தமிழகத்திலிருந்து 25 மைல்கள்தான். தஞ்சை மாவட்டத்திலுள்ள நாடியம், பேராவூரணியிலிருந்து படகில் சென்றால் 25 மைல் தான்—இடையிலே கடல்!

ஆனால் 25 மைல்களுக்கு அப்பாலே உள்ள இலங்கைக்குச் செல்ல முடியாமல் இன்று நேற்றல்ல; ஏற்கெனவே நான் பலமுறை தடுக்கப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே எந்தஆட்சி நடைபெற்ற நேரத்திலும் நான் இலங்கைக்குச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறேன்.

நான் முதலமைச்சர் பொறுப்பில் இருந்த நேரத்திலும்கூட அந்த வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் அங்கேயுள்ள தமிழர்கள், இங்கே அந்தத் தமிழர்களுக்காகப் பாடுபடுகிற அந்தத் தமிழர்களுக்காகப் பரிவுகாட்டுகிற — அந்தத் தமிழர்களின் கண்ணீரோடு தங்கள் கண்ணீரை—அந்தத் தமிழர்களின் இதய உணர்ச்சியைக் கலக்க அந்தத் தமிழர்களின் நல்வாழ்வு மலர வேண்டும் என்று பாடுபடுகிற ஒரு இயக்கம் இங்கே இருக்கிற மகிழ்ச்சியில் அவர்கள் ஆறுதலடைகிறார்கள்.

தமிழ்நாட்டிலிருக்கிற தமிழர்கள் மாத்திரமல்லாமல்; இங்கே இருக்கிற சிலர் அந்தப் பகுதி, இந்தப் பகுதி என்று பிரித்து அங்கொன்றும் இங்கொன்றும் பேசுவார்களென்றாலும் வெளிநாட்டிலிருக்கிற தமிழர்களெல்லாம் ஏகோபித்த குரலில் தங்களுடைய பாதுகாப்பு அரணாக தமிழ்நாட்டில் இருப்பது தி. மு. கழகம் ஒன்றுதான் என்று கருதுகிறார்கள் என்ற அந்த ஆறுதலோடு நாம் இங்கே சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொண்டு இலட்சியப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### இரங்கல் தீர்மானம்

'உலகத் தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த பெரியவர் செல்வநாயகம் அவர்களின் மறைவுக்கு இந்தத் தமிழ்ப் பெருங்கூட்டம் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பாக தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது' என்ற தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(தலைவரின் வேண்டுகோளுக்கேற்ப கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் ஒரு நிமிடம் அமைதியாக எழுந்து நின்று மறைந்த செல்வாவுக்கு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டனர்.)

---

● நூல் அறிமுகம்

## "மண் பசளை வளமாக்கி"

விஞ்ஞான முறையான விவசாயம் குறித்துத் தமிழில் முதன் முதலாய் அண்மையில் வெளிவந்துள்ள நூல் சி. கந்தையா அவர்களால் எழுதப்பட்ட 'மண், பசளை வளமாக்கி' என்பதாகும். இலங்கை விவசாயத் திணைக்களத்திலும், கல் ஓயாத்திட்டத்திலும் அரை நூற்றாண்டு வரை இத்துறைகளில் ஆய்வுகளை நடத்திப் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் எழுதப்படும் இந்நூல், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பெரிதும் பயனளிக்குமென்பது திண்ணம்.

மேலும் பல ஆண்டுகள் விவசாயம்போதிக்கும் அனுபவத்தையும் பெற்ற இவ்வாசிரியர் மாணவர்களின் தேவைகளுக்கு அமையவே இந்த [illegible] எழுதியுள்ளார். [illegible] விவசாயத்தை ஒரு பாடமாகப் படிக்கும் பொது உயர் தராதரமாணவர்கும், விவசாயப்பாடசாலைகளில் பயிலும் மாணவர்க்கும் இந்நூல் பேருதவியாயிருக்கும்.

அமைப்பில் வெகு வசீகரமாய் விளங்கும் இப்புத்தகம் மிக இலகுவான பழகு தமிழில் எழுதப்பட்டிருப்பது, குறிப்பிடவேண்டிய ஓர் அம்சமாகும். மண்ணின் பௌதீக, இரசாயன உயிரியற் பண்புகள், இலங்கையின் முக்கிய மண்தொகுதிகள், பயிர்ப்போசணிகள், அவைமிகுவதால் அல்லது குறைவதால் ஏற்படக்கூடிய தீய வினைகள், அவற்றின் குறிகள் போசணிகளை அளிக்கும் பசளைகள் வளமாக்கிகள் முதலான பல செய்திகள் தெளிவாய் விளக்கப்பட்டுள்ளன.

ஊற்றுத்தாபனத்தின் ஒரு பிரசாரமாக சுதந்திரன் அச்சகத்தில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

கிடைக்குமிடம்: சி. கந்தையா, 102/3, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13

---

## தொழிற்சங்க கூட்டணி சீட்டு விற்பனை மேலும் நீடிப்பு!

• தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் அதிஸ்டலாபச் சீட்டு விற்பனை 17—7—77ம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது. என்று கூட்டணி செயலாளர் நாயகம் ஐ. தி. சம்பந்தன் அறிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழ் இளைஞன் பலியானதற்கு

# பிரதமர் பேச்சு காரணமா?

பத்தனை டெவன் தோட்டத்திலுள்ள அப்பாவித் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு பொலிசாருக்கு எவ்விதம் துணிச்சல் ஏற்பட்டது? இந்தத் துணிச்சல் ஏற்படுவதற்கு காரணம் நுவரெலியா நகரமண்டபத்தில் அண்மையில் பிரதமர் பேசிய துவேஷப் பேச்சுத்தானா? இந்தக் கேள்வி கூட்டணி அரசியல் வட்டாரங்களில் இப்போது கேட்கப்படுகிறது.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அவர்கள் 7-5-77 சனிக்கிழமை நுவரெலியா நகரசபை மண்டபத்தில் அடுத்த தேர்தலில் நுவரெலியா தொகுதியில் போட்டியிடவிருக்கும் தனது மகன் அனுரா பண்டாரநாயகாவை ஆதரித்து ஒரு கூட்டத்தில் பேசினார். அப்போது தனது மகனுக்கு சார்பாக சிங்கள மக்களின் வாக்குறுதிகளை திருப்பி விடுவதற்காக திரு. தொண்டமானுக்கு எதிராகவும், மலையகத் தமிழ் மக்களின் நிலவுரிமைக் கோரிக்கைக்கு எதிராகவும் பச்சைத் துவேஷத்தை தமது பேச்சில் கக்கியிருந்தார்.

பிரதமர் அங்கு பேசியதை 9-5-77 வீரகேசரி பின்வருமாறு வெளியிட்டிருந்தது. அது வருமாறு:-

'எங்களது காணிகளை வெளிநாட்டார் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். அதனை மீட்டு நாங்கள் இந்நாட்டு மக்களுக்கே மீண்டும் பகிர்ந்தளிக்கிறோம். அப்படிப் பகிர்ந்தளிக்கப்படுவதை திரு. தொண்டமான் எதிர்க்கிறார். இந்த விஷயத்தில் கேள்வி கேட்க அவருக்கு என்ன உரிமை இருக்கிறது என்கிறேன். சிறிமா — சாத்திரி ஒப்பந்தத்தின் கீழ்தான் அவர்களுக்கு இந்தியாவில் காணி கிடைக்கிற மாதிரி ஏற்பாடு செய்திருக்கிறேனே. இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்த சிங்கள மக்களுக்கு காணி பங்கிடப்படுவதை எவரும் எதிர்க்கமுடியாது. கண்டிக்கவும் முடியாது. எவரது எதிர்ப்பையும் நாம் பொருட்படுத்தப் போவதில்லை; யார் எதிர்த்தாலும் காணிப் பங்கீட்டை நாம் கைவிடமாட்டோம்'.

மேற்கண்டவாறு பிரதமர் பேசியதாக வீரகேசரி செய்தி கூறியது. அதே கூட்டத்தில் பேசிய பிரதமர் மலையகத் தமிழர் தலைவர் திரு. தொண்டமான் 'அவர்களை தென்னிந்தியாவிலிருந்து வந்த, வந்தேறு குடி'யென்றும் ஏளனம் செய்து பேசியதாக செய்திகள் வெளிவந்திருந்தன.

பிரதமரின் இந்தப் பொறுப்பற்ற ஆணவமுனைப்பும் துவேஷமும் கலந்த பேச்சுத்தான் பொலிசாருக்கு அப்பாவித் தமிழ் தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடிய அளவுக்கு மனத் தைரியத்தை கொடுத்திருக்கவேண்டும் என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

தனது மகனை பாராளுமன்ற உறுப்பினராக்குவதற்காக சிங்கள இன வெறியை உற்சாகப்படுத்தி தூண்டிவிட்ட ஒரு தாயான பிரதமரின் பொறுப்பற்ற வெளிப்பேச்சு, சிங்களப் பொலிசாருக்கு புதிய உற்சாகத்தையும் தெம்பையும் கொடுத்திருக்கலாம்—அதன் விளைவாக மலையகத்தின் மண்ணுக்காக தலைமுறை தலைமுறையாக உழைத்து வந்த மற்றோர் தமிழ்த் தாயின் மகன் இலட்சுமணன் துப்பாக்கிக் குண்டுக்கு பலியானான்; என்று தமிழர் கூட்டணி வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

## செல்வாவே போய்விட்டார்; எந்த நாடகம் நடந்தாலென்ன?

அன்புள்ளகோவைமகேசனுக்கு

வீட்டில் இழப்பு அது அந்தக் குடும்பத்திற்கு வேதனை—நாட்டில் இழப்பு அது இனத்திற்கே பேரிடி — ஆம் தந்தையை இழந்தோம் — ஆறுகோடித் தமிழினமும் தந்தையை இழந்து துடித்தது பேரிடி! பேரதிர்ச்சி! பிரளயம்! பூகம்பம்! இன்னமும் சென்னையில் ஒரு உயிர் இருக்கிறது—ஆம் அது செல்வாவின் எண்ணங்கள் மலர—கொள்கை ஈடேற—தன் சாம்பலில் தமிழ் ஈழம் மலர — வேண்டும் — என்று இன்னமும் இருக்கிறது —

தங்கள் குரல் தொலைபேசியில் கேட்டதில் ஒரு ஆறுதல்! உங்கள் வருகைக்கு முயற்சிப்பேன் என்றதில் ஒரு நம்பிக்கை!

மணித்துளிகளை எண்ணி — தூதரகம் திசை நோக்கித் தொழுதிருந்தேன் — பாஸ்போட் எல்லாம் தயாரான நிலையில்! "வேறு யாரையும் சொல்லுங்கள் — எம். ஜி. ஆரா — கருணாநிதியா— நாவலரா — ஆனால் உம்மை மட்டும்......" "அப்படி ஒரு பயங்கரவாதியா நான்? எனக்குள்ளே கேட்டுப்பார்க்கிறேன்—

இல்லை நல்லதே செய்தார்கள்—அந்த எரிதீயில் இவன் வீழ்த்து விட்டால்—அந்தச் சோகத்தில் இவன் இதயம் வெடித்து விட்டால்—அங்கு இவன் பல நண்பர்களையும் நேரில் கண்டு பேசி — தன் செயலில் நம்பிக்கை இழந்து விட்டால் — நல்லதே செய்தார்கள்—செல்வாவேபோய் விட்டார் — எந்த நாடகம் நடந்தால் என்ன?

— இரா. சனார்த்தனம், உலகத் தமிழ் இளைஞர் பேரவை சென்னை.

## மூதறிஞர் செல்வாவுக்கு கவிதாஞ்சலி செய்தோர்

மூதறிஞர் — தமிழீழத் தந்தை—பெரியவர் செல்வா அவர்களின் பிரிவைத் தாள முடியாமல் தமிழ்க் கவிஞர்கள் இதயம் வெம்புகிறார்கள். அவர்களது சோகம்—தாங்கமுடியாத் துயரம்—இவற்றின் காரணமாக கவிதைகள் பிறக்கின்றன. இதுவரை இப்படி அறுபதுக்கு மேற்பட்ட கவிஞர்கள் தங்கள் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிக் கவிதைகளை சுதந்திரனுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். தந்தை செல்வா மீது அவர்கள் பாமாலை யாத்து அனுப்பியுள்ளார்கள். இக் கவிதைகள் அனைத்தையும் சுதந்திரனில் வெளியிட எமக்கு விருப்பம்தான் என்றாலும் இடவசதி அதற்கு இடம் கொடுப்பதாயில்லை. எனினும் ஏற்படும் இடவசதியைப் பொறுத்து தகுதியான கவிதைகள் அவ்வப்போது இடம்பெறுமென்பதை அறியத் தருகிறோம்.

கவிதாமலர்களால் தந்தை செல்வாவை அர்ச்சித்துள்ள கவிஞர்கள் வருமாறு:—

சக்தி அ. பாலையா, வளலாயூர் செ. சிவசம்பு, புரட்சிக் கவிஞர் மருதூர் வாணன், தெல்லியூர் சரவணன், திருக்கேதீச்சரம் 'முருகு,' யோகபாலேஸ்வரன், கணுக்கேணியூர் எஸ். ஆர். ஐங்கரலிங்கம், வாகரை ரி. எஸ். அன்னதுரை, திருக்கோணமலை ஸ்ரீ பிரசண்ணா, மட்டுநகர் முத்தழகு, வந்தாறு மூலை க. நடராசா, பரிபூரணர், காவலூர் வி. பற்றிக், விபுலானந்ததாசன், மு. துரைசாமி, செ. குணரத்தினம், திருமலைக்கலைமாறன், டிக்கோயா ஏ. எஸ். பத்மராஜ், பாணந்துறை கனகசபை, தமிழ் மோகன், பேசாலை யோ. எ. அ. குலாஸ், எஸ். பி. கிருஷ்ணன், திருமதி இராஜி சண்முகநாதன், மட்டக்களப்பு சிவானந்த தேவன், சி. கருணைந்தராஜா (ஆசிரியர் இளங்கதிர், பேராதனை வளாக தமிழ் சங்கம்), சொ. ஆராவமுதன், களுதாவளை கவிஞர் தேனூரான், பதுளை ம. தே. பொனிப்பாஸ், செங்கலடி இ. க. மகேந்திரராசா, புலோலி மேற்கு வி. எஸ். துரைராசா, க. இராஜமனோகரன், யோகா, நவரத்தினராசா குரூஸ், என் எஸ். பிள்ளை, வந்தாறு மூலை சோமலிங்கம், தாமரைத் தீவான், கதிர்நவம்.

குருக்கள் மடம் த. இ. பேரவை செயலாளர் சதா. நவரத்தினராசா, அக்கரைப்பற்று குறிஞ்சிவாணன், கல்முனை எச். ஏ. அஸீஸ், கரவை எழிலன், குச்சவெளிஆனந்த், கரவை கி. குலசேகரன், உனுப்பிட்டி ச. பத்மநாதன் கேணிப்பித்தன், அக்கரை மாணிக்கம், நாரந்தனையூர் வை. கந்தசாமி, துன்னையூர் சி. செல்லமுத்து. தமிழ்ச் செல்வன் மாசிலாமணி, அழியா நிலை ஆ. முத்தையா, "மணிக்கவிராயர்", ஈரோடு (தமிழ்நாடு) பாவலர் தமிழ்க் குமரன், யாழ்நகர் இரா. விஜயநாதன், மீசாலை ரி. தங்கராசா, கரவெட்டி சுசி தமிழினி, தமிழினி, புத்தளம் —வான்மதி, தெல்லிப்பளை நா. இராமலிங்கம், மல்லாவி யோகபுரம் "குகன்", சித்தன் கேணி த. முத்துவேலுப்பிள்ளை திருகோணமலைக் கவிராயர்.

## செல்வாவுக்கு இ. தொ. கழகம் அஞ்சலி!

தமிழ் இனத்தின் வரலாற்று நாயகன் தந்தை செல்வா அவர்களின் இறுதித் தினத்தில் நாம் எடுத்துக் கொண்ட சத்திய வாக்கின்படி தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் நடந்து மறைந்து விட்ட தந்தையின் லட்சிய கனவை நனவாக்குவோம். தமிழனுக்கென ஓர் ஆட்சியை அமைப்போம் அதுவே மறைந்த தெய்வம் தந்தை செல்வாவுக்கு செய்யும் சேவையாகும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் சட்டத்தரணி திரு. எம். பரராஜசிங்கம் இராகலையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்

—8-ம் பக்கம் பார்க்க

## ஒளிமயமாகி நிற்பார்!

— கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை —

தமிழுயிர் தவறிச் சென்றால்
சரித்திரம் சாயு மென்றே
தமிழர்தம் தலைமைத் தங்கம்
தந்தைசெல் வாவைப் பேண
அமிர்தசஞ் சீவித் தன்மை
அவுடதம் கொடுத்தும் பார்த்தார்,
விமலனே தமதேற் பாட்டின்
விதிமுறை அழைத்தே விட்டான்;

அரசியல் எதிரி கூட
அரங்கினில் எதிர்க்கும் போதும்
பெரியவர் செல்வா வுக்குப்
பெருமதி யளிப்பா ரென்றால்,
அருமைசேர் குணங்கள் யாவும்
அவரணி கலங்க ளாகும்
உரிமையே அவர்தம் பேச்சு
உயர்தமிழ் தந்தை மூச்சே!

ஒன்றுபட் டுயர்வீ ரென்றே
உதயசூ ரியனைக் காட்டி
நின்றுகட் டுப்பாட் டன்பை
நிதானமாய் நிறைத்த தந்தை
சென்றுவிட் டார்தான், ஆனால்
சிதைவின்றித் தமிழர் எல்லாம்
ஒன்றுபட் டிருந்தால் இங்கே
ஒளிமய மாகி நிற்பார்!

தலைவர்கள் எல்லாம் இங்கே
சடுதியாய் மறைகின் றார்கள்
நிலைமையை ஆரா யுங்கால்
உலைவுகள் தமிழர்க் கின்னும்
உள்ளதோ அறியோம், விண்ணூர்
தலைவனே நீதான் தஞ்சம்
தமிழர்தம் தலையைக் காப்பாய்!

ஆசனம் ஏறித் தங்கள்
அலுவலைப் பார்ப்ப தற்கும்
போசனம் பானத் தோடே
புசித்தற்கும், பின்பக் கத்தால்
பேசியும், ஏசும் பாங்காய்ப்
பிதற்றியும் தமிழர்க் கெல்லாம்
வேசமே காட்டத் தானே
விழிக்கிறார் சிலபே ரிங்கே

அடியிட்ட பேச்சுத் தன்னை
அடியொற்றி ஆராய் தற்கே
முடிகிட்டிச் சென்ற நல்ல
முத்துகள் தமையே தேர்ந்து
விடுதற்குத் துணைநிற் போரே
விடுதலை வீர ராவார்!
தடையின்றி உரிமை யாவும்
தந்தைசொல் வழியே சாரும்

கால்நூற்றாண் டாகத் தந்தை
கட்டியே காத்து வந்த
நூல்நாட்டும் உரிமைப் போரை
நுடங்கவே செய்யா வண்ணம்
சால்பூட்டும் சாந்தம் தூய்மை
சத்தியாக் கிரகம் அன்பு
மேல்நாட்டி விழிப்பே யூட்டி
விடுதலை விளக்கேற் றுங்காள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது




பாவியுங்கள்

அன்றும்

இன்றும்

என்றும்

மக்கள் மத்தியில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நீலம்

ரோயல் நீலம்

எமது மற்றும் பிரபல தயாரிப்புகள்

ரோயல் ஜெலி கிறிஸ்டல்
ரோயல் கஸ்டட் பவுடர்
ரோயல் பேக்கிங் பவுடர்
ரோயல் கோன் பிளவர்

தயாரித்து விற்பனை செய்பவர்கள்

சிவா இண்டஸ்ட்ரிஸ்

112 - 1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11

### செல்வாவுக்கு இ. ...

—7-ம் பக்கத் தொடர்

டத்தில் உரையாற்றும் போது கூறினர்.

மாவட்டத்துணைத் தலைவர் திரு. கே. பெரமய்யா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மற்றும் துணைச் செயலாளர் அ. கெங்கரட்ணம் மாவட்டப்பிரதிநிதி திரு. ஜீ. எல். டி. கோவிந்தராஜன்,

### தமிழ்தொழி...

—1-ம்பக்கத் தொடர்

லாளர்கள் தாங்களாகவே தங்களுக்கென்று ஒரு தற்காப்பு அணி திரட்ட நேரிடுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.

மாவட்டக் காரியதரிசி திரு. எம். ஆர். கே. காளிமுத்து, உடபுசல்லாவை மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். ஏ. என். ஆபிரஹாம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

எஸ். தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மலையகத்தில் அரசால் சுவீகரிக்கப்பட்ட தோட்ட நிலங்களை சிங்களவர்களுக்கு மட்டுமே பிரித்துக்கொடுக்கும் அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கை எதிர்த்தும், தமக்கும் காணி நிலம் கோரியும் மலையகத்தமிழர்கள் போராடி வருவது தெரிந்ததே.

### சுதந்திரத் தமிழ்...

—4-ம் பக்கத் தொடர்

—இவ்வாறு வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் 14-5-77 சனிக்கிழமை நடைபெற்ற தந்தை செல்வா இரங்கற் கூட்டத்தில் பேசிய நாவலர் அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதிபதி திரு. வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டணியின் மற்றோர் செயலதிபரான திரு. மு. சிவசிதம்பரமும்பேசினர் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளும் பேசினர்கள்.

‘ஒலிவ் ஸ்நானப் பவுடர்’

எண்ணெய் முழுக்குக்கு சிறந்த ஒலிவ் ஸ்நானப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு

செல்லமகால் 10-வது வாரம்

முத்துராமன், சுஜாதா, ஸ்ரீகாந்த், பத்மபிரியா, மனோரமா, ஜெயச்சந்திரன், எம். என். ராஜம்,

— நடித்த —

எஸ். எஸ். கே. பிலிம்ஸாரின்

வாழ்ந்து காட்டுகிறேன்

5-வது வெற்றி வாரம்

கெயிட்டி

சிவாஜி கணேசன், சௌகார் ஜானகி, வி. கே. ராமசாமி, உஷாநந்தினி, எம். ஆர். ஆர். வாசு

— நடித்த —

விஜயவேல் பிலிம்ஸாரின்

மனிதனும் தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மன் கலர்)

நீகல் [மட்டுநகர்] 9-வது வாரம்

எம், ஜி. ஆர். ராதா சலுஜா -நடித்த

இதயக்கனி ஈஸ்ட்மன் கலர்

கிங்ஸ்லி 3வது வாரம் பிளாசா

ஏ. வி. எம். ராஜன், ஜெயா, சுகுமாரி, நாகேஷ், சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன், பேபி சுமதி நடித்த

தேவரின்

திருவருள் (கலர்)

24-வது வாரம்

கெப்பிட்டல் - விஜயா (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, சந்திரகலா நடித்த

உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்) 10-வது வாரம்

முத்துராமன், சுஜாதா, பத்மபிரியா, சுருளிராஜன், மனோரமா, ஜெயச்சந்திரன் எம். என். ராஜம், பானுமதி நடித்த-

வாழ்ந்துகாட்டுகிறேன்

லிடோ (யாழ்நகர்) 5-வது வாரம்

ரவிச்சந்திரன், லதா நடித்த

சொர்க்கத்தில் திருமணம் (கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12, பண்டாரநாயகா வீதி, 194ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் மே மாதம் 22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.